## அத்தியாயம் 19

கீதா தன் அறையிலிருந்த ஜன்னல் வழியாக வெளியே தெரிந்த தோட்டத்தை பார்த்து கொண்டிருந்தாள். அவளின் நண்பர்கள் அனைவரும் அங்கிருக்க வீட்டு பெரியவர்கள் ஹாலில் உட்கார்ந்து அந்த கால கதைகளை பேசி கொண்டிருந்தனர்.

அபிராமியும் சக்தியும் இரவுணவுக்கு தயார் செய்ய வானதியும் உமாவும் பேசிக் கொண்டே காய்கறிகளை நறுக்கி கொண்டிருந்தனர். சுகன்யாவும் பிரேமாவும் மசாலா பொருட்களை மிக்ஸியில் அரைத்து கொண்டிருந்தனர்.

அந்த வீட்டில் இரு ஜீவன்கள் மட்டும் யாரிடமும் ஒன்றாமல் தனிமையில் இருந்தனர்.

கீதா தன் அறைக்குள் முடங்கிக் கிடந்தாள் என்றால் வருணோ கார்டனில் போட்டிருந்த பெஞ்சில் சாய்ந்து படுத்து கொண்டு வானத்தயே வெறித்து கொண்டிருந்தான்.

அவனிடம் வந்த லோகேஷ் " அண்ணா! இன்னும் ஃபைட் முடியலயா?" என்று கேட்டான்.

" எனக்கு கீதாவ எப்பிடி சமாதானப் படுத்தனும்னு தெரியலடா., நான் அவ கிட்ட கொஞ்சம் ரூடா பிஹேவ் பண்ணிட்டேனு நெனக்கிறேன். பட் அவ மட்டும் என்ன புரிஞ்சிகிட்டா நான் ஏன் அப்பிடி நடந்திருக்க போறேன்? அந்த ராஸ்கல் ரோட்ல அவ்ளோ பேசிட்டு வீட்டுலயும் வந்து உக்காந்திருக்கான். அவன இன்னொரு தடவை பாத்தா நான் கண்டிப்பா என்னோட கன்ட்ரோல எழந்துடுவேண்டா"

" அண்ணா! அவன் யாரோ ஒருத்தன். அவனுக்காக நீங்க ரெண்டு பேரும் ஏன் பேசாம இருக்கனும்?? போய் அண்ணிய சமாதானப் படுத்துங்க"

" அத தான் எப்பிடி பண்ணனும்னு தெரியாம முழிச்சிட்டிருக்கேண்டா"

" யூ கேன் டூ ப்ரோ" என்று சொல்லி தோளில் தட்டி விட்டு சென்றான்.

எழுந்து கொண்ட வருண் திரும்பி வீட்டை பார்க்க ஜன்னல் வழியே தோட்டத்தை பார்த்து கொண்டிருந்த கீதா அவன் பார்வையில் பட்டாள். மதியம் நடந்த நிகழ்வுகளை நினைத்தவன் " சே அவ கிட்ட ரொம்ப

கத்திட்டேனே., என்னோட கீத்து அத நெனச்சி தான் இப்பிடி தனியா இருக்கா" என்று மனதில் நினைத்தவன் அவளை சமாதானப்படுத்த வீட்டினுள் சென்றான்.

கீதாவின் அறை மாடியில் இருந்ததால் அவள் கோபத்தில் கத்தினாலும் பெரியவர்களுக்கு கேட்காது என்ற நிம்மதியுடன் கதவை தட்ட சென்றான். கதவு தாளிடாமல் இருந்ததால் திறந்து கொண்டது.

உள்ளே சென்றவன் அந்த பெரிய ஜன்னலில் சாய்ந்து உட்கார்ந்து வெளியே வேடிக்கை பார்த்து கொண்டிருந்த கீதாவை பார்த்ததும் உருகி விட்டான். தன் மீதே கோபம் கொண்டவன் அவளை சமாதானப்படுத்துவதற்காக அருகில் சென்றான்.

அவன் வாசலில் நிற்கும் போதே அவனின் வருகையை தெரிந்து கொண்ட கீதா அவனை கவனிக்காதது போலவே அமர்ந்திருந்தாள். அவளின் அருகில் வந்த வருண் " கீத்து" என்று அழைத்து அவளின் கையை தொட வர அவள் அவன் கையை தட்டி விட்டுவிட்டு எழுந்து சென்று தரையில் கிடத்தப்பட்டிருந்த சிறு மெத்தையில் அமர்ந்தாள்.

அவள் அருகில் உட்கார்ந்த வருண் " என் மேல கோவம் இருந்தா ரெண்டு அடி கூட அடிச்சுக்கோ., ப்ளீஸ் பேசாம மட்டும் இருக்காத கீத்து" என்று சொல்ல அவள் முகத்தை வேறு புறமாக திருப்பி கொண்டாள்.

அவள் முகத்தை பற்றி தன் புறமாக திருப்பியவன் " கீத்து., சாரி டா., ப்ளீஸ் பேசு" என்று கூற அவள் கண்ணில் அவள் அறியாமல் கண்ணீர் நிரம்பியது.

" ஏய் என்னாச்சுமா?? இங்க பாரு! ஏன் அழறே?? கீத்து இங்க பாருடி" என்று அவன் தன் கண்ணை பார்க்குமாறு கூற அவள் நிமிர்ந்து அவனை பார்த்தாள்.

" ஏன் அப்பிடி பண்ணுன வருண்??" என்று கேட்க அவனுக்கு முதலில் எதுவுமே புரியவில்லை.

அவனை பார்த்து கொண்டே " எனக்கு தெரிஞ்ச வருணுக்கு இவ்ளோ கோவம்லாம் வந்ததே கெடயாது. இன்னிக்கு ஏன் அப்பிடி நடந்துகிட்ட?? நான் தடுக்க வரலனா என்ன ஆகிருக்கும்?" என்று அவள் கண்ணீருடன் கேட்டாள்.

அவளை கூரிய விழிகளால் பார்த்து "அவன் அடி வாங்கி செத்துருப்பான்"என்று சாதாரணமாக சொன்ன வருணை அதிர்ச்சியுடன் பார்த்தாள் கீதா.

" என்ன பேசுற வருண்?? நமக்கு பிடிக்காதவனாவே இருக்கட்டும். அதுக்கு இப்பிடிலாம் பேசுறது கொஞ்சம் கூட நியாயம் இல்லடா. ஒரு உயிர் போறத இவ்ளோ சாதாரணமா சொல்லுற?"

" எனக்கு உன் அளவுக்கு டீப்பா யோசிக்க தெரியாம இருக்கலாம். பட் அவன்னு இல்ல, யாரு உன்ன பத்தி நெகட்டிவ்வா பேசுனாலும் நான் இப்பிடி தான் ரியாக்ட் பண்ணுவேன். இனியும் இப்பிடி தான். இதுல நான் தெளிவா இருக்கேன்"

" இப்பிடிலாம் பேசாத வருண். உன்னோட இந்த கோவத்த நெனச்சா எனக்கு பயமா இருக்கு"

" உனக்கு இது புதுசா தான் இருக்கும் கீத்து. என்னோட கோவத்தை நான் என்னிக்குமே உன் கிட்ட காமிச்சது இல்ல. என்னால உன் மேல கோவப்படவும் முடியாது. எனக்கு உன்ன ரொம்ப பிடிக்கும் கீதா. உன்னை யாராச்சும் தொந்தரவு பண்ணனும்னு யோசிச்சா கூட நான் அவங்கள உயிரோட விட மாட்டேன்"

" வருண் ப்ளீஸ். நான் சொல்ல போறத கொஞ்சம் நிதானமா கேளு"

" நீ நான் சொல்ல வர்ரத புரிஞ்சிக்க ட்ரை பண்ணு. நான் தேவை இல்லாம யார் மேலயும் கோவப்படவும் மாட்டேன். இந்த மாதிரி சண்டை போடவும் மாட்டேன். பட் நான் உயிரா நெனைக்கிறவங்கள யாராவது டிஸ்டர்ப் பண்ணனும்னு நெனச்சா எனக்கு வேற வழி இல்ல"

" ஓகே! நாம ஏன் நெகடிவ்வா யோசிக்கனும்?? அப்பிடி யாரும் வர மாட்டாங்க. நீயும் கோவப்படாம அமைதியா இருப்ப" என்று உறுதியாக சொல்லி கொண்டு கண்ணீரை துடைத்தாள் கீதா.

" ஹப்பா! நீ சமாதானம் ஆயிட்ட., நாட் பேட் வருண்" என்று அவன் தன்னை தானே பாராட்டிக் கொள்ள கீதா " ஹலோ! உனக்கு சமாதானப்படுத்தவே தெரியல., நான் தான் பாவப்பட்டு உன் கிட்ட பேசுறேன் மிஸ்டர் ஜெர்மன்" என்று கெத்தாக கூறினாள்.

" அப்பிடியே பாவப்பட்டு ஒரு கிஸ் குடுத்திங்கனா நான் கொஞ்சம் பெட்டரா ஃபீல் பண்ணுவேன்"

" அஹான்., நீ ஃபீல் பண்ணவே வேண்டாம். முதல்ல ரூம விட்டு வெளியே போ. எல்லாரும் வீட்டில இருக்காங்க. இப்போ உனக்கு கிஸ் கேக்குதா?"

" அவங்க இருந்தா நான் என்னடி பண்ணுவேன்?? 5 மன்த்ஸ் உன் பின்னாடி அலைஞ்சு திரிஞ்சு உன்ன ஓகே சொல்ல வச்சிருக்கேன். பாவப்பட்டு கூட ஒரு கிஸ் குடுக்க மாட்டியா?"

" இப்பிடியே பேசிட்டு இருந்தா உன் கன்னத்துல ரெண்டு அறை வேணா குடுப்பேனே தவிர கிஸ்ஸுக்குலாம் சான்ஸே இல்ல., நீ கௌம்பு தம்பி"

" அடியே இதுலாம் டூ மச்டி., உனக்காக சண்டைலாம் போட்டுருக்கேன்மா., "

" நானா உங்கள சண்டை போட சொன்னேன் சார்?"

" இதலாம் சொல்லியா பண்ணுவாங்க?? கம் ஆன், லீவ் இட். இங்க பாரு. இந்த காயம் உனக்காக சண்டை போட போய் தான் வந்துச்சு. சோ இதுக்காகயாச்சும் நீ கிஸ் பண்ணி தான் ஆகணும்"

" முடியாதுடா. இப்போ நீ கௌம்பலனு வை நான் அனுவ கூப்டுவேன்"

" ஐயோ! அப்பிடி எதுவும் பண்ணிடாத தாயே! நான் கௌம்புறேன்" என்று வாசல் வரை சென்றவன் ஓடி வந்து அவளை அணைத்து கொண்டான். அவனின் இதயதுடிப்பை கேட்டபடியே கண் மூடியிருந்த கீதாவின் நெற்றியில் முத்தமிட்டு " இது ஃபர்ஸ்ட் கிஸ். நெக்ஸ்ட் சாப்பிட்டு முடிச்சதுக்கு அப்றமா. ஓகே" என்று சொல்ல கீதா சரியென்று தலையாட்டியபடியே அவனுக்கு விடை கொடுத்தாள்.

இவ்வாறு இரவு கடந்து காலை விடிந்தது. ட்ராக் சூட்டுடன் வாக்கிங் செல்ல ரெடியான வருணுடன் கீதாவும் இணைந்து கொண்டாள். அந்த காலை நேர நடை அவளது குழந்தை பருவத்தில் ஆரம்பித்த பழக்கம்.

காலை எழுந்தவுடன் இவ்வாறு நடப்பது அவளது தாத்தா அருணாச்சலத்தின் வழக்கம். அவருடன் எழுந்த கீதாவும் தினமும் அவருடன் வாக்கிங் செல்வாள். அவள் செல்வதற்கு முக்கிய காரணம் இரண்டு.

ஒன்று: காலையில் கணேசய்யர் கடையில் அவளது தாத்தா வாங்கி தரும் சோன் பப்டிக்காகவும், இரண்டு : முன்தினம் பள்ளி நிகழ்வுகளை தாத்தாவிடம் ஒப்பிப்பதற்காகவும் தான்.

பழைய நிகழ்வுகளில் நனைந்து கொண்டே நடந்தவள் கணேசய்யர் கடை சிறிய மாற்றங்களுடன் இன்னும் இருப்பதை கண்டு மகிழ்ந்தாள். வருணின் கையை பிடித்து அந்த கடையை காட்டி தாத்தாவை பற்றி கூற அவன் அங்கே அவளை அழைத்து சென்றான்.

காலை நேரம் என்பதால் அவ்வளவு கூட்டம் இல்லை. இவர்கள் தான் முதல் கஸ்டமர்.

கடையினுள் மரமேஜை நாற்காலி சகிதம் உட்கார்ந்திருந்த கணேசய்யரை அடையாளம் கண்டு கொண்ட கீதா " தாத்தா சோன் பப்டி இருக்குதா?" என்று கேட்க அவரோ " அட என்னம்மா இந்த காலத்துல யாரு அத வாங்குறாங்க? அதுவும் இவ்ளோ காலங்காத்தால" என்று கேட்டார்.

" நான் சாப்டுவேன் அய்யர் தாத்தா! " என்று சொல்லவும் அவருக்கு ஏதோ பொறி தட்டியது போல அருணாச்சலத்தின் நினைவு வரவே அங்கே நின்று கொண்டிருந்த கீதாவை உற்று பார்த்தவர் அடையாளம் கண்டு கொண்டார்.

" அருணாச்சலத்தோட பேத்தி தான?? எப்பிடிடா இருக்க கொழந்தே" என்று வாஞ்சையுடன் கேட்ட பெரியவரை பார்த்து " நல்லா இருக்கேன் தாத்தா" என்று முறுவலித்தவள் அவரிடம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு வருணுடன் நடக்க தொடங்கினாள்.

" அந்த பாலம் நான் சின்ன பொண்ணா இருக்கிரப்போ கட்டுனாங்க வருண். அப்போ இந்த ஆத்துல நெறைய தண்ணி போகுமா., சோ பாலம் கட்டுரவரைக்கும் ஒரு டெம்ப்ரரி ப்ரிட்ஜ் வுட்ல இங்க கட்டுனாங்க. எனக்கு உயரம்னா பயம். சோ நான் இங்க வர்ரப்போ கண்ண மூடிப்பேன். மாமா தான் என்ன ஒரு கரைல இருந்து அடுத்த கரைக்கு தூக்கிடு வருவாங்க. அதுலாம் இப்போ நடந்த மாதிரி இருக்கு" என்று சொல்லிவிட்டு வரவிருந்த கண்ணீரை அடக்கியபடியே வருணின் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

அவளது தலையை தடவிய படியே " அவங்க எல்லாரும் உன்னோட மனசுல இருக்காங்க கீத்து! அத யாராலும் அழிக்க முடியாது. இப்போ அழகா என்னை பாத்து ஸ்மைல் பண்ணுவியாம். சிரி"என்று சொல்லிவிட்டு அவளுக்கு

கிச்சுகிச்சு மூட்ட அவள் அவனிடம் இருந்து தப்பிக்க முயற்சித்து கொண்டே வாய் விட்டு சிரித்தாள்.

" ஓகே! வாக்கிங்க கண்டினியூ பண்ணுவோமா?" என்று கேட்டவனை பார்த்து புன்னகையுடன் சரி என்று தலையாட்ட இருவரும் கை கோர்த்தபடி நடக்க ஆரம்பித்தனர்...

காதல் என்பது வெறும் ரொமான்ஸ் மட்டும் அல்ல., சந்தோசத்தை சேர்ந்து கொண்டாடுவதும், துன்பத்தை பகிர்ந்து கொள்வதும், உலகமே எதிர்த்தாலும் ஒருவரையொருவர் விட்டுக் கொடுக்காமல் இருப்பதும் கூட காதல் தான்...